பதிப்புரிமை ஆசிரியருக்கே /All Rights to Author]

தமிழ்வழி பரீட்சைகள் 22 T III

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முதலாம் தவணைப் பரீட்சை

General Cerificate of Education (Ord. Level) First Term Examination

தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

மூன்று மணித்தியாலம்
Three hours

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்:..................................................

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

- அறிவுறுத்தலுக்கு ஏற்ப **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**(i)** பின்வரும் தொடரைச் **சந்திபிரித்து** எழுதுக.
புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்

**(ii)** "உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்..."
(அ) இங்கு, **'அறுசுவை'** உணவாகக் கருதப்படுவது எது?
(ஆ) **'தப்பிய கந்தை'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**(iii)** "கலியுக அரிச்சந்திரனாக மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்தினார். அவருக்கு சத்தியமே பெரிது"
(அ) காந்தியடிகளை **'கலியுக அரிச்சந்திரன்'** எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
(ஆ) காந்தியடிகளின் வாழ்வின் இலட்சியமாக இருந்தது எது?

**(iv)** "...கணக்காய ரில்லாதவூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்...." - இங்கு
(அ) **'கணக்காயர்'** என்று குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) **'பிணக்கறுத்தல்'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**(v)** "கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பல கழித்திட்டனன்"
(அ) **'கோத்த சிந்தனை'** என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(ஆ) பல நாட்களை வீணே செலவுசெய்தவர் யார்?

**(vi)** "மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"
(அ) நாவலரது எழுச்சி ஒப்பிட்டுக் காட்டப்படும் **இதிகாசப் பாத்திரம்** எது?
(ஆ) பின்வருவனவற்றுக்குப் பொருளுரைக்குக. 1. மடங்கல் 2. பொன்னாகம்

**(vii)** "சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகின்றார்"
(அ) **'பதேர்பாஞ்சாலி'** என்பது எவ்வகைக் கலை வடிவமாகும்?
(ஆ) **'மயங்கித்தெளிதல்'** என்றால் என்ன?

ஏ.கஜன் - தமிழ் வழி பரீட்சைகள்

**(viii)**“…..நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே”
(அ) **‘பொய்கையூரன்’** என்ற தொடர் எந்த நிலத்துத் தலைவனைக் குறிக்கின்றது?
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள **குறிப்புவினை**ச் சொல் எது?

**(ix)** “ஆடிக் குடத்தடையு மாடும்போ தேதிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்”
(அ) இவ்வடியில் பயின்றுள்ள **அணி**யைக் குறிப்பிடுக.
(ஆ) இங்கு, பாம்பிற்கு **ஈடாக**க் குறிப்பிடப்படும் பொருள் எது?

**(x)** “கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்”
(அ) **‘கட்டுரை’** என்ற சொல் இங்கு எதனைக் குறிக்கின்றது?
(ஆ) இதனைப் பாடிய புலவரின் **பெயர்** யாது?

**(20 புள்ளிகள்)**

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. “….. குளித்து மணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுந்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சில சொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே”

(அ) முதுமையின் இரங்கத்தக்க நிலை இங்கு எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?
(ஆ) **‘கல்லா விளமை’** என்பதன் மூலமாக இளமைப் பருவத்தின் எத்தகைய நிலை புலப்படுத்தப்படுகின்றது?

2. புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துள்ளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.

(அ) மானிடர் விரும்பியவற்றை அடையும் வழிவகை எவையென ஞானியர் குறிப்பிடுகின்றனர்?
(ஆ) **‘விலங்கியற்றை’** என்ற தொடரின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

3. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(அ) இச் செய்யுளில் கூறப்படும் **பிரதான கருத்து** யாது?
(ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

4. “சினிமா, காமிராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சிப் படிமத்திற்கும், ஒலிக்கும் அப் படத்தில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காட்சி வந்தால் அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகின்றது. சினிமா, வாய்ப்பேச்சால் வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலி நாடாவிலோ வானொலியிலோ கேட்டுத் திருப்தியடைய முடியும்”

(அ) இங்கு நல்ல சினிமாவின் சிறப்புக்களாகக் குறிப்பிடப்படுவன யாவை?
(ஆ) ஒரு சினிமா எப்போது பல்சுவை நிகழ்ச்சியாகின்றது?

ஏ.கஜன் - தமிழ் வழி பரீட்சைகள் - ஏ.கஜன்

5. "வாதத்துக்கென்று வந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகையின்றி தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக் கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து 'பிறிற்றோ தக்கவர் அல்லர்' என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக் கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது."

(அ) கூட்ட மண்டபத்தில் உண்டான மாற்றத்தை கட்டுரையாசிரியர் எவ்விதம் எள்ளி நகையாடுகின்றார்?

(ஆ) பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றமைக்கான காரணம் யாது?

**(20 புள்ளிகள்)**

**3.** **'நாட்டார் பாடல்கள்'** பகுதியில்,

(அ) **'ஏர்ப்பாடலின்'** ஊடாக நல்ல சிந்தனைகளும்

(ஆ) **'அரிவி வெட்டு'** பாடலில் ஐயனாரிடம் செய்யப்படும் வேண்டுதல்களும்

(இ) **'காதற்பாட்டில்'** ஆழமான காதல் உணர்வுகளும் முன்வைக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

**'கம்பியூட்டர்'** எனும் சிறுகதையில்,

(அ) கம்பியூட்டர் பற்றி விவரிப்பன

(ஆ) உத்தி முறைகள் என்பவற்றைச் சுருக்கமாக ஆராய்க.

**(15 புள்ளிகள்)**

**4.** (அ) 'தண்டா மரையினுடன்...' (விவேகசிந்தாமணி)

(ஆ) 'தேம்படுபனையின் திரள்...' (வெற்றிவேற்கை)

- ஆகிய பாடல்களில் **முறையே**

(i) மண்டூகம் - வண்டு

(ii) பனை – ஆலமரம்

என்பவற்றின் இயல்புகள் எடுத்துரைக்கப்படுமாற்றை ஆராய்க.

**அல்லது**

**'இலட்சியமும் சமநோக்கும்'** என்ற கட்டுரையில்,

(அ) இலட்சியமும் இலக்கியங்களும்

(ஆ) இலட்சியமும் சமூக உருவாக்கமும் தொடர்புபடுமாற்றினை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

ஏ.கஜன் - தமிழ் வழி பரீட்சைகள் - ஏ.கஜன்

✸ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**5.** **கம்பராமாயணம் - குகப் படலத்தில்** பரதன் குகனுக்கு,

(அ) கோசலை

(ஆ) சுமித்திரை ஆகியோரை அறிமுகஞ்செய்யும் பாங்கினை விளக்குக. **(10 புள்ளிகள்)**

**6.** **'திருக்குற்றாலக் குறவஞ்சி'** என்ற பாடப்பகுதியில்,

(அ) நாட்டுவளம்

(ஆ) திரிகூடநாதரின் மேன்மை

என்பன புலப்படுத்தப்படுமாற்றைத் துலக்குக. **(10 புள்ளிகள்)**

**7.** **திருக்குறள் - பேதைமை** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,

(அ) பேதைமையின் இலக்கணம்

(ஆ) பேதையர் அடையும் துன்பம் - என்பன வெளிப்படுத்தப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**